APRIL/MAY 2025

FTA62/CTA62/BTA62 — இலக்கணம் – 6 (புறம்)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஓரிரு சொல் / சொற்றொடரில் விடை தருக.

1. வெட்சித் திணையின் இருவகைகளைச் சுட்டுக.
2. வெட்சியார் குடலை வேலுக்கு மாலையாகச் சுட்டி மகிழ்ந்து ஆடுதற்கு என்ன பெயர்?
3. வஞ்சித்திணை குறிப்பு வரைக.
4. பெருங்காஞ்சி என்பது யாது?
5. எயில் காத்தல் எத்திணைக்கு உரியது?
6. 'குற்றுழிஞை' - எனில் யாது?
7. தும்பைத் திணையின் பொருண்மையைக் குறிப்பிடுக.
8. 'வாகை அரவம்' - பொருள் தருக.
9. 'வாயுறை வாழ்த்து' - விளக்கம் தந்திடுக.
10. ஓம்படை என்றால் என்ன?

Shanmuga Industries Arts & Science College
T.V.Malai

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'ஊர்கொலை', 'ஆகோள்' - துறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பாதீடு', 'உண்டாட்டு' - துறைகளை விளக்கிடுக.

12. (அ) 'தலை காஞ்சி', 'தலை மாராயம்', 'தலையொடு முடிதல்' துறைகளை இயம்பிடுக.

(அல்லது)

(ஆ) 'கட்காஞ்சி', 'ஆஞ்சிக் காஞ்சி', 'மகட்பாற் காஞ்சி' - துறை செய்திகளைக் கூறுக.

13. (அ) 'முரச உழிஞை', 'கொற்ற உழிசை', 'அரச உழிஞை' - விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) 'பாசிநிலை', 'ஏணிநிலை', 'எயிற்பாசி' - துறைகளின் சிறப்பை உரைத்திடுக.

14. (அ) 'முன், பின் தேர்க் குரவை', 'பேய்க் குரவை' - செய்திகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) 'சிருங்கார நிலை', 'உவகைக் கலுழ்ச்சி' - துறைகளின் சிறப்பைப் புலப்படுத்துக.

15. (அ) 'கண்படை நிலை', 'துயிலெடை நிலை', 'மங்கல நிலை' - பற்றியெழுதுக.

(அல்லது)

(ஆ) 'கொடிநிலை', 'கந்தழி', 'வள்ளி' - துறைக் கருத்துக்களைப் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் ஒவ்வொன்றிற்கும் விடையளிக்க.

16. கரந்தையின் இலக்கணம் கூறி, துறைகளை விளக்கி வரைக.

17. வஞ்சித்திணையில் வஞ்சியென முடியும் துறைகளைத் தெளிவுப்படுத்துக.

18. 'நுவலரும் காப்பின் நொச்சி' எனும் திணை நுவலும் செய்திகளை விவரித்திடுக.

19. வாகைப் படலத்தில் வாகையென முடியும் துறைகளை விளக்கி வரைக.

20. பாடாண் படலத்தின் சிறப்புகளாக நீவிர் அறிவனவற்றை விளக்கிக் கூறுக.

———————